தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 26, திருவள்ளுவர் ஆண்டு—2053

2023 ஜனவரி 10, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

நிலையற்ற வாழ்க்கையில், உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாத மீளா உறக்கம் கொள்வதே இறப்பு.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. அ. சின்னசாமி, திரு. தில்லை காந்தி என்கிற கோ. ஆதிமூலம், திரு. துரை கோவிந்தராசன் மற்றும் திரு. ந. சோமசுந்தரம் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. அ. சின்னசாமி அவர்கள் 17-7-2022 அன்றும், திரு. தில்லை காந்தி என்கிற கோ. ஆதிமூலம் அவர்கள் 28-9-2022 அன்றும், திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் 7-11-2022 அன்றும் மற்றும் திரு. ந. சோமசுந்தரம் அவர்கள் 7-12-2022 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. அ. சின்னசாமி அவர்கள் 1971-1976 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2023 ஜனவரி 10

திரு. தில்லை காந்தி என்கிற கோ. ஆதிமூலம் அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டுகளில் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் 1971-1976 ஆம் ஆண்டுகளில் கந்தர்வக்கோட்டை தொகுதியிலிருந்தும், 1977-1980 ஆம் ஆண்டுகளில் திருவோணம் தொகுதியிலிருந்தும் மற்றும் 1985-1988 ஆம் ஆண்டுகளில் திருவையாறு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1977-1980 மற்றும் 1985-1988 ஆகிய ஆண்டுகளில் அரசு தலைமைக் கொறடாவாகவும் சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ந. சோமசுந்தரம் அவர்கள் 1967-1971 மற்றும் 1971-1976 ஆகிய ஆண்டுகளில் வலங்கைமான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) (i) முனைவர் க. நெடுஞ்செழியன், தமிழறிஞர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். தமிழ்மொழி அறிஞரும் தமிழின அரிமாவுமான பேராசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள் 4-11-2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.